සුබසාධක ප්‍රතිලාභ මණ්ඩලය

நலன்புரி நன்மைகள் சபை

WELFARE BENEFITS BOARD

# நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
## வெற்றிடங்கள்

*நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள நலன்புரி நன்மைகள் சபையில் உள்ள பின்வரும் வெற்றிடங்களுக்கு பொருத்தமான தகுதியும் அனுபவமும் உள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதவி வெற்றிடங்கள் கொழும்பு தலைமை அலுவலகத்தில் மட்டுமே நிரப்பப்படும் என்பதைத் தயவு செய்து கவனத்தில் கொள்ளவும் .*

| இல | பதவி | வெற்றிடங்களின் எணணிக்கை | தகைமைகள் |
|---|---|---|---|
| 01 | நலன்புரி நன்மைகள் பிரதி ஆணையாளர் (கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு) MM-1-3 | 01 | <u>தகைமைகள் மற்றும் அனுபவம்</u><br><br><u>வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:</u><br><br>1. பொருளியல், கருத்திட்ட முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், அபிவிருத்தி கற்கைள், தரவு விஞ்ஞானம் ஆகியவற்றில் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுடன் தொடர்பான விடயப் பரப்பில் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.<br><br>அத்துடன்<br><br>2. முதலாவது பட்டம் பெற்றதன் பின்னர் குறித்த பதவியுடன் தொடர்புடைய துறையில் ஆகக்குறைந்தது நான்கு (04) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br><u>உள்ளக விண்ணப்பதாரர்கள்: (கீழ் 1 அல்லது 2)</u><br><br><u>1.</u> மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு அவசியமான தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்<br><br>அல்லது<br><br>2. MM 1-1 உள்ள ஒரு பதவியில், பதவியுடன் தொடர்புடைய விடயப் பரப்பில் குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருக்க வேண்டும்.<br><br>**சம்பள அளவுத் திட்டம்**: - 96,650 - 10 x 2,480 -15 x 3,450 - 173, 200 (MM 1-3)<br>**அடிப்படை சம்பள படிநிலை:- ரூ. 85,896/-** (முகாமைத்துவ திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 01/2025-இன் அட்டவணை 11-இன் படி)<br>(திறைசேரி சுற்றறிக்கைகளின்படி அங்கீகரிக்கப்பட்ட அரசின் கொடுப்பனவுகள் மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் உரித்தாகும்) |

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

| | | | |
|---|---|---|---|
| 02 | நலன்புரி நன்மைகள் உதவி ஆணையாளர் (அபிவிருத்தியும் ஆராய்ச்சியும் )<br>MM-1-1 | 01 | **<u>தகைமைகள் மற்றும் அனுபவம்</u>**<br><br><u>வெளிவாரி விண்ணப்பதாரர்கள்</u><br><br><u>1.</u> பொருளாதாரம் / புள்ளிவிபரவியல் / நிதியியல் / பொது நிர்வாகம் / வணிக நிர்வாகம் ஆகியவற்றில் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுடன் தொடர்பான விடயப் பரப்பில் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல<br><br>*மற்றும்*<br><br>முதல் பட்டப்படிப்பைப் பெற்ற பிறகு, பதவி விடயத்துடன் தொடர்புடைய துறையில் குறைந்தது ஒரு வருடகால பதவி அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்<br><br><u>உள்ளக விண்ணப்பதாரர்கள்</u><br><br><u>1.</u> மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு அவசியமான தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்<br><br>**சம்பள அளவுத் திட்டம்**: - 91,690- 10 x 2,480 -15 x 3,450 - 168, 240 (MM 1-1)<br>**அடிப்படை சம்பள படிநிலை: -** ரூ.81,710/- ( முகாமைத்துவ திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 01/2025-இன் அட்டவணை 11-இன் படி)<br>(திறைசேரி சுற்றறிக்கைகளின்படி அங்கீகரிக்கப்பட்ட அரசின் கொடுப்பனவுகள் மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் உரித்தாகும் |

**வயதெல்லைகள்**

<u>பிரதி நலன்புரி ஆணையாளர், உதவி நலன்புரி ஆணையாளர் -</u>

22வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாகாது.

**பொதுவான நிபந்தனைகள்: -**

- ❖ ஊழியர் சேமலாப நிதிக்கு சம்பளத்தில் 8% செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் அரசாங்க பங்களிப்பான 12% த்தினை நலன்புரி நன்மைகள் சபை செலுத்தும். மேலும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான 3% பங்களிப்பு நலன்புரி நன்மைகள் சபையினால் செலுத்தப்படும்.
- ❖ நேர்முகப்பரீட்சையில் பெறுகின்ற அதிகூடிய புள்ளிகளின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.
- ❖ இப் பதவி நிரந்தரமானது. பதவி நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

**மாதாந்த ஊதியம்:**

- ❖ MM 1-3 - 2025 ரூபா. [96,650 - 10 x 2,480 - 15 x 3,450 – 173,200] + அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்,
- ❖ MM 1-1-2025 ரூபா. [91,690 – 10 x 2,480 - 15 x 3,450 – 168,240] + அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்,
- ❖ சம்பளத்தில் 8% ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிக்க வேண்டும், மேலும் நலன்புரி நன்மைகள் சபை 12% அரசாங்க பங்களிப்பாக செலுத்தும். மேலும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% பங்களிப்பு நலன்புரி நன்மைகள் சபையால் செலுத்தப்படுகிறது.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

- ❖ விண்ணப்பப்படிவத்தை பின்வரும் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யமுடியும்
- ❖ https://www.wbb.gov.lk/web/si/jobs

  அல்லது
- ❖ https://www.treasury.gov.lk >> [Vacancies] (To open directly, SCAN the QR)

  **For Online Application Preparation Documentation**
- ❖ https://wbbmis.online/document

| SCAN - QR | SCAN - QR | Online Documentation |
|---|---|---|
| WBB –Vacancy | Ministry of Finance | WBBMIS - Document Portal<br>https://wbbmis.online/document |

- ❖ பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை 2026.10.26…ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்,**ஆணையாளர், நலன்புரி நன்மைகள் சபை, J.R.ஜெயவர்தன மத்திய நிலையம், 191, தர்மபால மாவத்த, கொழும்பு – 07**.எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும், விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

- ❖ அரசாங்க /கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய நிறுவனத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். தாமதித்து கிடைக்கும், பூரணமற்ற அல்லது இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

- ❖ ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பித்தால், விண்ணப்பங்களை தனித்தனி உறைகளில் இணைத்து ஒவ்வொரு பதவிக்கும் **சான்றிதழ்களின் நகல்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்**.

இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல், திருத்துதல், மாற்றியமைத்தல் அல்லது விண்ணப்பதாரிகளை சுருக்க பட்டியற்படுத்தல் தொடர்பில் நலன்புரி நன்மைகள் சபையின் தலைவருக்கே அனைத்து உரிமைகளும் உண்டு

**ஆணையாளர்**
**நலன்புரி நன்மைகள் சபை**
**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED